ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2282/60 - 2022 ජුනි මස 03 වැනි සිකුරාදා - 2022.06.03

*2282/60 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்*

*2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 5, 7 மற்றும் 8 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

*கொழும்பு 01,*
*2022, மே 31.*

ஒழுங்குவிதிகள்

*2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட, 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி 03 ஆந் திகதியிடப்பட்ட 2213/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்ற நோக்கங்களுக்காக கணக்குகளைத் திறந்து பேணி வருதல்) ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :*

பின்வருவது ஒழுங்குவிதிகளின் அட்டவணையின் பந்தி 2 இன் துணைப்பந்தி (3) ஆக உட்புகுத்தப்படுகிறது :-

3. "2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் கொழும்பு துறைமுக நகர அதிகார சபையின் பிரதேசத்திலும் அதிலிருந்தும் வியாபாரத்தில்

1A - PG 5861 — 456 (2022/06)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

ஈடுபடுவதற்காக அனுமதிக்கப்பட்டுள்ள அதிகாரம்பெற்ற ஆளொருவரிடமிருந்து வெளிநாட்டுச் செலாவணியினை ஈட்டுகின்ற இலங்கையில் வதியும் பின்வரும் ஆட்கள்-

(அ) அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரின் ஊழியரொருவர்.

(ஆ) பொருட்கள் அல்லது சேவைகளை வழங்குகின்ற நோக்கத்திற்காக, அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவருடன் வியாபாரங்களில் ஈடுபடுகின்ற ஆளொருவர்".

EOG *06-0056*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.